## சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாராந்த பாடசாலை

Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

## கணிதம்

தரம் 10

வாரம் 46

**அலகு : நிகழ்தகவு**

**இவ்வாரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :**

1. நிரப்பு நிகழ்ச்சியை இனங்காண்பார்.
2. A என்ற நிகழ்ச்சியின் நிரப்பு நிகழ்ச்சி $A'$ ஆயிருக்க $P(A') = 1 - P(A)$ எனக் கூறுவார்.
3. தம்முள் புறநீங்கும் நிகழ்ச்சிகளை உதாரணங்கள் மூலம் விளக்குவார்.
4. தம்முள் புறநீங்கலற்ற நிகழ்ச்சிகளை உதாரணங்கள் மூலம் விளக்குவார்.
5. தம்முள் புறநீங்கலற்ற நிகழ்ச்சிகள் A, B எனின் $P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$ என்ற சூத்திரம் பயன்படுத்தி நிகழ்தகவுகளைக் காண்பார்.

**மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :**

- கணிதம் பகுதி II பக்கம் 160 – 163 வரை உள்ள விடயங்கள் தொடர்பில் சுய கற்றலில் ஈடுபடுக.
- அவற்றினூடு பின்வரும் சொற்களுக்கான விளக்கங்களை அறிந்து கொள்க.
    - இரண்டு நிகழ்ச்சிகளின் இடைவெட்டும் ஒன்றிப்பும்
    - தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகள்
    - நிரப்பி நிகழ்ச்சி
- பாடப்புத்தகத்தின் பக்கம் 163, 164 இலுள்ள உதாரணங்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்க.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 164, 165 இலுள்ள பயிற்சி 30.2 இற்கான விடைகளை எழுதுக.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 165 - 168 வரையுள்ள பாட விடயங்கள் மற்றும் உதாரணங்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்க.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 168 - 170 வரையுள்ள பயிற்சி 30.3 இற்கான விடைகளை எழுதுக.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 170, 172 வரையுள்ள பாட விடயங்கள் மற்றும் உதாரணங்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்க.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 173 இலுள்ள பயிற்சி 30.4 இற்கான விடைகளை எழுதுக.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 173, 176 வரையுள்ள பாட விடயங்கள் மற்றும் உதாரணங்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்க.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 176 இலுள்ள பயிற்சி 30.5 இற்கான விடைகளை எழுதுக.
- பாடப்புத்தகத்தின் பக்கம் 177 – 179 வரையுள்ள பலவினப் பயிற்சிக்கான விடைகளை எழுதுக.

- மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்புட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.
- இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.
- அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**ethaksalawa :** https://youtu.be/J4v4TGOo5Ng

**Youtube :** **https://youtu.be/F1staJcVpmg**

https://youtu.be/FQ4YpJB2Xa4

https://youtu.be/H5zWQiboIlM

**கணிப்பீடு :**

01. 1 தொடக்கம் 5 வரை இலக்கம் எழுதப்பட்ட ஒரெ அளவான மாபிள்களுள் ஒரு மாபிளை வெளியில் எடுக்கும் எழுமாற்றுப் பரிசோதனையில்
    - I. மாதிரிவெளியைக் காண்க.
    - II. A என்பது ஒற்றை இலக்கமாகும். தொடை A இனை மூலகங்களுடன் எழுதுக.
    - III. A' நிகழ்ச்சியை மூலகங்களுடன் எழுதுக.
    - IV. n(A) ஐக் காண்க.
    - V. p (A) ஐக் காண்க.

02. 1 தொடக்கம் 4 வரை இலக்கமிடப்பட்ட நான்முகித் தாயக் கட்டைகள் இரண்டினை ஒன்றாக மேலே எறியும் எழமாற்றுப் பரிசோதனையின் மாதிரிவெளியை ஒரு நெய்யரியில் குறிக்க.
    - I. தாயக்கட்டைகள் இரண்டிலும் ஒரே எண் கிடைப்பதற்கான நிகழ்ச்சியை கட்டமிட்டு A எனப் பெயரிடுக.
    - II. n(A) எத்தனை?
    - III. தாயக்கட்டைகள் இரண்டிலும் முதன்மை எண் கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

03. பையொன்றினுள் ஒரே வகையான சிவப்பு நிறப் பந்துகள் 3 உம் நீல நிறப் பந்துகள் 2 உம் உள்ளன. அதிலிருந்து எழுமாறாக ஒரு பந்தை வெளியில் எடுத்து நிறத்தைக் குறித்துக் கொண்டு அதனை மீண்டும் அப்பையினுள் இட்டு இன்னுமொரு பந்து எடுக்கப்படுகின்றது.
    - I. இவ் எழுமாற்றுப் பரிசோதனையின் மாதிரிவெளியை வரைபடத்தில் குறிக்க.
    - II. எடுத்த இரு பந்துகளும் சிவப்பு நிறமாவதற்கான நிகழ்தகவைக் காண்க.
    - III. எடுத்த இரு பந்துகளும் ஒரே நிறமாக அமைவதற்கான நிகழ்தகவைக் காண்க.